# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.368/2018

### அ.சா. 18 (LW 32)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.சுரேஷ்குமார்** | **தொழில்** | **காவல் துணை கண்காணிப்பாளர்** |
| **த/க பெயர்** | பாலகிருஷ்ணன் | **மதம்** | |
| **கிராமம்** | **ஆணையூர்** | **வயது** | **55** |
| **தாலூகா** | | **தேதி** | **23.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 எதிரி ஆஜர். 2 மற்றும் 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. 4 ஆம் எதிரி வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது திருநெல்வேலி மாநகர குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.06.2018 திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனுர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து போது, நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ரபீக் என்பவர் பதிவு செய்த நிலைய குற்ற எண்,.173/2018 சட்டபிரிவுகள் 302 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பார்வையிட்டு எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றை தினம் அதிகாலை 02.45 மணிக்க சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகளான ஜெயராமன் மற்றும் மலைச்சாமி ஆகியோர் முன்னிலையில் வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். பின்னர் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த வரைபடம் **அ.த.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பார்வை மகஜர் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு சம்பவ இடத்தில் அதிகாலை 04.00 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் இருந்த டியோ இருசக்கர வாகனம் TN 57 BQ 6700 ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் ஜெயராமன் மற்றும் மலைச்சாமி முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன், அந்த அத்தாட்சியில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரத்தம் படிந்த மண் சா.பொ.2 ஆக ஏற்கனவே குறியீடு

செய்யப்பட்டுள்ளது. ரத்தம் படியாத மண் சா.பொ.3 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. டியோ இருசக்கர வாகனம் TN 59 BQ 6700 **சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்ற ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண் ஆகியவற்றை படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்ற டியோ இருசக்கர வாகனம் TN 59 BQ 6700 இருசக்கர வாகனத்தை படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு சாட்சிகள் பால்ராஜ், கேசவமூர்த்தி, பூபாலன், நாகசூரியா, இனியன் மற்றும் சம்பவ இட சாட்சிகளான மலைச்சாமி , ஜெயராமன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கில் கொலையுண்டு போன மோகன்ராஜ் என்பவரின் பிரேத்தை பிரேத பரிசோதனைக்காக த.கா. திரு.ஞானசேவியர் மூலம் திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்பு காலை 06.30 மணி முதல் 08.30 மணி வரை திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் இந்த வழக்கில் இறந்து போன மோகன்ராஜ் என்பவரது பிரேதத்தின் மீது சாட்சிகள் போஸ், பழனி, ரஞ்சித் குமார், கணேஸ் குமார், நாகூர் கனி ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பஞ்சாயத்ததார் சாட்சிகளான போஸ், பழனி, ரஞ்சித் குமார், கணேஸ் குமார், நாகூர் கனி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறப்பின் உண்மை தன்மை அறியும் பொருட்டு தலைமைக்காவலர் திரு.ஞானசேவியர் மூலம் திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனை மருத்துவருக்கு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.16 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு பிரேத பரிசோதனை முடிந்து அரசு மருத்துவர் மூலம் த.கா.திரு.ஞானசேவியர் என்பவர் ஆஜர்படுத்திய ரத்தக்கரை படிந்த வெள்ளை நிற சட்டை -1, நீள நிற ஜீன்ஸ் பேண்ட் -1, ரத்தக்கரை படிந்த பூமக்ஸ் பச்சைக்கலர் ஜட்டி -1 ஆகியவற்றை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். பின்னர் அந்த படிவத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். **அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ரத்தக்கரை படிந்த வெள்ளை நிற சட்டை -1 சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீள நிற ஜீன்ஸ் பேண்ட் -1 **சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ரத்தக்கரை படிந்த பூமக்ஸ் பச்சைக்கலர் ஜட்டி -1 **சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 06.06.2018 தேதி வழக்கின் விசாரணையை தொடர்ந்து மேற்கொண்டு சாட்சிகள் திரு.ராஜேஷ்(அறிவியல் நிபுணர்) என்பவரை விசாரரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 07.06.2018 அன்று சாட்சிகள் காட்டுராஜா, பகவதிராஜா, சரஸ்வதி, மரகதம், தங்க மீனா, சாந்தி, தனலெட்சுமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 10.08.2018 அன்று

இந்த வழக்கில் கைப்பற்றபட்டு வழக்கு சொத்துக்களை ரசாயன பகுப்பாய்விற்காக நிலக்கோட்டை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.17 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் நீதிமன்ற உத்தவின் படி மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு த.கா.திரு.ஞான சேவியர் என்பவர் ஒப்படைத்தார். அந்த நீதிமன்ற உத்தரவு **அ.த.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கொலையுண்டு இறந்து போன மோகன் ராஜ் என்பவரின் பிரேத உடல் கூராய்வு செய்த மருத்துவர் திரு.விக்னேஷ் என்பவரை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 22.08.2018 அன்று காலை 11.00 மணிக்கு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில், அம்மையநாயக்கனூர் காவல் நிலைய குற்ற எண். 237/2018 சட்டப்பிரிவுகள் 397 உ/இ.506(1) இதச வழக்கில் எதிரிகளான புலிக்குட்டி (எ) ஒச்சான், கார்த்திக் (எ) ஆப்பிள் கார்த்திக் ஆகியோர்களை சோழவந்தான் ரோடு சந்தோச புரம் பிரிவு அருகில் கைது செய்து விசாரணை செய்து அவர்கள் தானாக முன்வந்து சாட்சிகள் திருமதி.கலா கிராம நிர்வாக அலுவலர், திரு. ராஜேந்திரன் கிராம நிர்வாக உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி சாட்சிகளிடமும், எதிரிகளிடமும் கையொப்பம் பெற்றேன். புலிக்குட்டி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கார்த்திக் (எ) ஆப்பிள் கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 24.08.2018 அன்று பகல் 12.00 மணிக்கு இவ்வழக்கில் முதல் எதிரியான சூரியா என்ற ஜெயசூரியாவை அவர் ஏற்கனவே மதுரை மாநகர் செல்லூர் காவல் நிலைய குற்ற எண். 1109/2018 சட்டப்பிரிவுகள் 397 உ/இ,395 இதச வழக்கில் கைது செய்யப்பட்டு 18.08.2018 முதல் மதுரை மத்திய சிறையில் இருந்தவரை சம்பரதாய கைது செய்தேன். பின்னர் நிலக்கோட்டை நீதித்துறை நடுவரிடம் நீதிமன்றத்தில் எதிரியான சூரியா என்ற ஜெயசூரியாவை ஆஜர்படுத்த PT Warrant பெற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். பின்பு 30.08.2018 தேதி விசாரணை மேற்கொண்டு இவ்வழக்கின் 2 வது எதிரி வழுக்கை என்ற அஜித்குமார் என்பவரை வத்தலகுண்டு – பெரியகுளம் ரோட்டில் ஆம்பூர் பிரியாணி கடை முன்பு காலை 06.15 மணிக்கு கைது செய்து, சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் சிவகுமார் மற்றும் கிராம அலுவலக உதவியாளர் வீரமணி ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அஜித்குமார் என்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து தருவதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சாஆ.4 ஆக ஏற்கனவே

குறியீடு செய்யபட்டுள்ளது. பின்பு எதிரி மற்றும் சாட்சிகளுடனும் சென்று எதிரி தனது வீடான மதுரை பழைய விளாங்குடியில் சி.எ.ஏஸ் காலனி 2 வது தெருவில் தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த சுமார் 33 செ.மீ கத்தியை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் காலை 10.00 மணிக்கு கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றபட்ட கத்தியானது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிரி அஜித்குமார் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்தேன். பின்பு படிவம் 91 தயார் செய்தேன். அந்த படிவம் 91 **அ.த.சாஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வழக்கு சொத்துக்களையும் எதிரியையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்பு சூரியா என்ற ஜெயசூரியா, ஒச்சான் என்ற புலிக்குட்டி, கார்த்தி என்ற ஆப்பிள் கார்த்திக் ஆகியோர்களை சாட்சிகளான திரு.பூபாலன், நாகசூரியா ஆகியோர்கள் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டி திண்டுக்கல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் 04.09.2018 அன்று மேற்படி சாட்சிகளுக்கு நீதிமன்ற உத்தரவின் படி சம்மன் சார்பு செய்தும், திண்டுக்கல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் முன்னிலையில் சாட்சிகளை ஆஜர் செய்து அடையாள அணிவகுப்பானது நடைபெற்றது. பின்னர் 05.09.2018 அன்று எதிரி வழுக்கை என்ற அஜித்குமார் என்பவருக்கு அடையாள அணிவகுப்பு நடத்த அனுமதி கோரி திண்டுக்கல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். எதிரி ஜெயசூரியா என்பவரை போலிஸ் காவல் கேட்டு நிலக்கோட்டை நீதித்துறை நடுவரிடம் மனுத்தாக்கல் செய்தேன். அந்த மனு **அ.த.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி நீதிமன்ற உத்தரவு கு.ப,மனு எண். 5235/2018 ஐ பெற்றேன். அந்த உத்தரவு **அ.த.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அந்த உத்தரவின் படி மேற்படி எதிரியை போலிஸ் காவலில் எடுத்து 08.09.2018 அன்று காலை சாட்சிகளான கிராமநிர்வாக அலுவலர் திருமதி.கலா மற்றும் கிராம உதவியாளர் திரு.ராஜேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி ஜெயசூரியாவை விசாரிக்கு அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரியிடமும் சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தின் படி தன்னை அழைந்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய சுமார் 35 செமீ நீளமுள்ள கைத்தி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். மேலும் அவர் தான் சம்பவத்தின் போது தான் பயன்படுத்திய TN 63 AA 0435 yamaha FZ என்ற இருசக்கர வாகனத்தை செல்லூர் காவல் நிலைய குற்ற வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதால் அதில் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறினார். பின்பு அதன் அடிப்படையில் மதுரை சொக்கநாதபுரத்தில் அவரது வீட்டில் மறைத்து

வைத்திருந்த இடத்தில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த கத்தியை அத்தாட்சியில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் காலை 10.30 மணிக்கு கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.14 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கத்தியானது சா.பொ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு சொத்தான சுமார் 35 செமீ நீளமுள்ள இருப்பு கத்தி ஒன்றை படிவம் 91 பதிவு செய்தேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் நீதிமன்றத்திற்கு படிவம் 91 ஐ அனுப்பி வைத்தேன். பின்பு 10.09.2018 அன்று இந்த வழக்கில் இறந்து போன மோகன்ராஜ் என்பவரின் உடல் கூராய்வு செய்து இறுதி கருத்துரை பெற்றேன்.

12.09.2018 அன்று சாட்சிகள் பூபாலன், கேசவமூர்த்தி, நாகசூரியா ஆகியோர்களுக்கு திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 அவர்களால் அளிக்கப்பட்ட சம்மனை சார்பு செய்து மேற்படி சாட்சிகளை இந்த வழக்கின் 2 எதிரி அஜித்குமார் என்பவரை மதுரை மத்திய சிறையில் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்காக சாட்சிகளை நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர்படுத்தி அணிவகுப்பானது நடத்தப்பட்டது. பின்னர் 05.10.2018 தேதி இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களை பகுப்பாய்வு செய்த மதுரை வட்டார தடய அறிவியல் அலுவலர் திரு.நவநீதகிருஷ்ணன் என்பவரிடம் விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட சிராலஜி அறிக்கை **அ,த.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பயாலஜி அறிக்கை அ,த.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் மேற்கொண்ட பிரேத விசாரணை அறிக்கை அ,த.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.ரபீக் மற்றும் த.கா. திரு.ஞானசேவியர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் சட்டப்பரிவுகளை 13.10.2018 அன்று இவ்வழக்கின் விசாரணை மேற்கொண்டு எதிரிகள் அளித்த வாக்குமூலம் மற்றும் சாட்சிகள் விசாரணையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 302 இதச வில் இருந்து 302,393,342,506(2),201,34 இதச வாக சட்ட பிரிவை மாறுதல் செய்து சட்ட மாறுதல் அறிக்கையை நிலக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும் இவ்வழக்கில் எனது விசாரணையில் சம்பவத்தன்று 1 ஆம் எதிரி ஜெயசூரியா ஓட்டி வந்த TN 63 AA 0435 Yemaha FZ மோட்டார் வாகனம் மதுரை செல்லூர் காவல் நிலைய குற்ற எண். 1109/2018 ச.பி.397 உ/இ.395 வழக்கில் சம்மந்தப்பட்டு மதுரை JM2 நீதிமன்றத்தில் RPR No.367/2018 ஆக நம்பராகி

உள்ளதையும், 3 ஆம் எதிரி புலிக்குட்டி என்ற ஒச்சான் சம்பவத்தின் போது பயன்படுத்திய TN 65 E 5775 Yemaha Libra என்ற வாகனம் மதுரை கரிமேடு காவல் நிலைய குற்ற எண். 411/2018 சட்டப்பிரிவுகள் 392 உ/இ.397 வழக்கில் சம்பந்தபட்ட மதுரை JM4 நீதிமன்றத்தில் RPR No.420/2018 ஆக நம்பராகி உள்ளதையும் மேற்படி வாகனங்கள் இரண்டையும் நீதிமன்ற காவலில் இருந்து வந்தது தெரியவந்தது. பின்பு இவ்வழக்கின் எனது விசாரணை முடித்து 1 முதல் 4 எதிரிகள் மீது 18.10.2018 அன்று சட்டப்பரிவுகள் 302,393,342,506(2),201,34 இதச குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து டோல்கேட் சுமார் 5 கிமீ தள்ளி உள்ளது டோல்கேட்டில் எங்களது காவல்நிலைய ரோந்து வாகனம் மற்றும் தேசிய நெடுஞ்சாலை வாகனம், மற்றும் ஆம்புலன்ஸ் இருக்கும் என்றால் பெரும்பாலான நேரங்களில் இருக்கும். தேசிய நெடுஞ்சாலையில் எந்த சம்பவம் ஏற்பட்டாலும் அதை உடனடியாக எங்கள் ரோந்து வாகனத்திலுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர், மற்றும் காவலர் எங்கள் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்வார்கள் என்றால் சரிதான். ரோந்து வாகனத்தில் உள்ளவர்கள் பாக்கெட் நோட் புக்கை பரமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். ரோந்து வாகனத்தில் ஒரு Log book பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். சம்பவத்தன்று ஆய்வாளராகிய நான் சம்பவ இடம் சென்ற பிறகு அவர்களை அழைத்து விசாரணை செய்தேனா அல்லது அவர்கள் வைத்திருந்த பாக்கெட் நோட் புக்கை கைப்பற்றினேனா என்றால் அவர்களை விசாரித்தேன். ஆனால் பாக்கெட் நோட் புக்கை கைப்பற்றவில்லை. இறந்தவரின் நண்பர்கள் சம்பவ இடத்தில்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களை முதன்முதலில் பார்த்தது யார் , விசாரித்தது யார் என்றால் உதவி ஆய்வாளர் ரபீக் மற்றும் காவல் ஆய்வாளராகிய நானும் விசாரணை செய்தோம். சம்பவ தினத்தன்று அவர்களை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. மறுநாள் 04.06.2018 அன்று விசாரித்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று அவர்களை விசாரணை செய்து 04.06.2018 அன்று விரிவான வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் தொடர்பாக முதன் முதலில் கிடைத்த தகவலை விசாரணையில் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. ரோந்து வாகனத்தில் இருந்தவர்கள் தான் சம்பவத்தை பார்த்து அவர்களை காவல்நிலையம் அழைத்து வந்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் இருந்த அனைவருமே அவர்களை விசாரித்தோம். காவல் நிலையத்தில் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் ரபீக், அன்று இரவு பணியிலிருந்த காவலர்கள் விசாரித்தார்கள். நான் சொல்வது போல் உதவி ஆய்வாளர் ரபீக்கோ மற்ற காவலர்கள் இல்லை என்றாலும் ஒரே ஒரு காவலர்தான்

இருந்தார் என்றால் சரியல்ல. இறந்தவரின் நண்பர்கள் கொடுத்த முதல் தகவலை மறைத்து உண்மைக்கு புறம்பாக பின்னிட்டு புகார் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்து பதிவேடு பதிந்த மருத்துவரை சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் குற்றபத்திரிக்கையில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றாலும் அவரை விசாரித்திருந்தால் அவரின் வாக்குமூலம் இவ்வழக்கிற்கு எதிராக அமையும் என்பதாலும் அதை மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. இறந்தவரின் பிரேதத்தை கொண்டு சென்ற கிரேடு 1 கான்ஸ்டபிள் ராஜு என்பவரை விசாரிக்கவில்லை என்றாலும் கடவுச்சீட்டு, மெமோ எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் நேரம் 04.15 A.M மற்றும் 03.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இது குறித்து யாரையாவது விசாரித்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை 04.06.2018 காலை 08.00 மணிக்குத்தான் நீதித்துறை நடுவரால் பெறப்பட்டதாக மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்றாலும் துரித முதல் தகவல் அறிக்கை 07.00 மணி நேரம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது என்பது பற்றி இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் நடுஇரவில் சம்பவம் நடந்ததன் காரணமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டது. குறிப்பாக எவ்வளவு காலதாமதம் என்பதற்கு குறிப்பு இல்லை என்றால் இல்லை. பிரேத விசாரணை அறிக்கை முடிந்தபின்புதான் முதல் தகவல் அறிக்கை 04.06.2018 அன்று காலை 07.30 மணிக்கு தயாரிக்கப்பட்டு நீதித்துறை நடுவருக்கு அனுப்பபட்டதால் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் காவல்நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 13 முதர் 14 கிமீ தூரம் இருக்கலாம் . நீதித்துறை நடுவர் அவர்களின் குடியிருப்பு நீதிமன்ற வளாகத்தில் உள்ளது என்றால் சரிதான். போலிஸ் ஸ்டேண்டிங் ஆர்டர் பிரகாரம் துரித முதல் தகவல் அறிக்கை அதிவிரைவாக நீதித்துறை நடுவருக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்றால் சரிதான். டோல்கேட்டில் சம்பவம் நடந்த தினத்தன்று குறிப்பிட்ட நேரத்தில் இரண்டு சக்கர வாகனங்கள் எத்தனை கடந்தது என்பதற்கு சிசிடிவி புட்டேஜ் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் அந்த இரவு நேரத்தில் இருசக்கர வாகனம் செல்வதற்கு தனியாக பாதை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் சரிவர தெரியாததால் சிசிடிவி புட்டேஜை எடுத்து விசாரணைக்கு உட்படுத்தவில்லை. சிசிடிவி புட்டேஜ் கிடைத்தும் வேண்டுமென்றே இந்த வழக்கில் எதிரிகளுக்கு சாதகமாக அது அமையும் என்பதால் விசாரணையில் உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையின் 9 வது காலத்தில் அடையாளம் தெரியாத 4 பேரில் இருவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேத விசாணையின் போது எந்தெந்த சாட்சிகளை நான் விசாரித்தேன் என்றால் பஞ்சாயத்தார்கள் முன்பு பிரேத விசாரணை செய்தேன். இறந்தவரின் நண்பர்களான கேசவமூர்த்தி, பூபாலன், மற்றும் நாகசூர்யா

ஆகியோரை விசாரித்தேனா என்றால் அவர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தில் சம்பவத்தில் ஈடுபட்ட அடையாளம் தெரியாத நபர்களை பற்றி விசாரிக்கும் போது அவர்களின் உருவ அமைப்பு பற்றி குள்ளமா, கனத்தவரா, கருத்த நிறம்,கொண்டவரா, வெள்ளை நிறம், கொண்டவரா, தோராயமான வயது, என்ன நிற ஆடைகள் அணிந்திருந்தனர் என்பது பற்றி விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் அன்றைய தினம் அடையாளம் தெரியாத நபர்கள் என கூறினார்கள். பின்னர் விசாரணையின் போது மேற்படி எதிரிகளின் உருவ அமைப்பு மற்றும் வயது பற்றி விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். எங்கள் காவல்நிலையத்தில் சந்தேகத்தின் பேரில் எதிரிகளை பிடித்து வைத்தும், கண்ணுற்ற சாட்சிகளை காவல்நிலையத்திற்கு வரவழைத்து இவர்தான் எதிரிகள் என்று சொல்லி அடையாளம் காண்பித்து அவர்களை புகைப்படம் எடுத்து அதன் பின்புதான் அடையாள அணிவகுப்பு நடத்தினேன் என்பதால் அது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. என் புலன்விசாரணையின் போது அடையாள அணிவகுப்பு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். வழக்கு கோப்பில் ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் 2 கத்திகள் சந்தையில் கிடைக்க கூடியது என்றால் சரியல்ல. 161 வாக்குமூலங்கள் காலதாமதமாகத்தான் நீதிமன்றம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பின்பு மறு வாக்குமூலங்கள் குற்றப்பத்திரிக்கையுடன் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கான காரணம் உள்ளதா என்றால் எந்த குறிப்பிட்ட காரணமும் இல்லை. 30.08.2018 அன்று காலை 06.00 மணிக்கு வத்தலக்குண்டு ரோட்டில் ஆம்பூர் பிரியாணி கடை முன்பு அஜித்குமாரை கைது செய்து அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன் என்றும் அதன் அடிப்படையில் அவர் சான்று பொருள் எடுத்து தருவதாக கூறியதன் அடிப்படையில் கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. விஏஓ சிவக்குமார் அவரது உதவியாளர் வீரமணி ஆகியோர் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் பின்னிட்டு நான் தயார் செய்த ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்திட்டார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் எங்கள் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. ஜெயசூர்யா தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் சான்று பொருட்களை கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றிய 2 கத்திகளையும் இரசயான பகுப்பாய்வுக்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ஒரு கல்லை எடுத்து இறந்தவரை அடித்தார்கள் என விசாரணையில் சாட்சிகள் சொல்லியுள்ளது குறித்து நான் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். எந்த குறிப்பிட்ட கல் என கண்டுபிடிக்க இயலவில்லை. அதனால் கைப்பற்றவில்லை. நான் சரிவர புலன்விசாரணை

**செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக நான் தயாரித்த பொய்யான புகார் மற்றும் வாக்குமூலம், சான்று பொருட்களை வைத்து தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் மோகன்ராஜ் இறப்பிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல., எதிரிகள் மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.23 22:19:57 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.